க. பொ. த உயர்தரம் – புதிய பாடத்திட்டம்

தமிழ்

கம்பராமாயணம் – குகப்படலம்

(வினா விடைத் தொகுப்பு)



தொகுப்பாசிரியர்

இரா. நிஷாந்தன்

ஆசிரியர்

கிளி/இராமநாதபுரம் ம.வி

கம்பராமாயணம்

☞ இதிகாசங்களில் ஒன்றாக விளங்கும் பெருமையுடையது இராமாயணமாகும்.

☞ வடமொழியில் வால்மீகியால் இயற்றப்பட்ட இவ் இராமாயணம் ஆதி காவியம் என சிறப்பிக்கப்படுகின்றது.

☞ இராமாயணத்தை தமிழில் இயற்றியவர் கம்பர். ஆகையால் இது கம்பராமாயணம் என அழைக்கப்படுகின்றது.

☞ விஷ்ணுவின் அவதாரமாகிய இராமனின் பெருமைகளையும், சிறப்புக்களையும் கூறியிருப்பது கம்பராமாயணமாகும்.

☞ கம்பராமாயணத்தில் ஆறு காண்டங்கள் பால காண்டம், அயோத்யா காண்டம், ஆரண்ய காண்டம், கிட்கிந்தா காண்டம், சுந்தர காண்டம், யுத்த காண்டம் என்பனவாகும் அவை.

☞ இராமாயணத்தில் பெரும் பகுதி காண்டம் எனப்படும். சிறுபகுதி படலம் எனப்படும்.

குகப் படலம் (கங்கை காண்படலம்)

☞ கம்பராமாயணத்தில் இரண்டாவது காண்டமாகிய அயோத்தியா காண்டத்தில் உள்ள படலம் குகப்படலமாகும்.

☞ பரதன் இராமன் இருக்கும் காடு சென்று அவனை அழைத்து வந்து மீண்டும் ஆட்சி செய்ய வைப்பேன் எனக் கூறி, செல்லும் இடத்து, அவனுடன் அவனது தாய்மாரும், பெரும் சேனையும் உடன் வருகின்றது. அப்போது கங்கைக்கரை அடைந்த பரதனின் சேனையைக் கண்ட குகன் சந்தேகம் கொண்டு பின் கோபமடைந்து, தன் சேனையை தயார் செய்து, பின் பரதன் நிலை கண்டு திகைத்து, பரதனுடன் உறவாடி அன்பு பாராட்டுவது வரையான பாடல்களை இங்கு காணலாம்.

☞ பரதன் கங்கையைக் கண்டமையால் இது கங்கை காண் படலம் எனவும் அழைக்கப்படுகின்றது.

☞ இப் பகுதி குகப்படலம் எனப்பட்டாலும், கங்கை காண்படலம் என்பதே பொருத்தமானதாகும். ஏனெனில் பரதன் கங்கையைக் கண்டு குகன் உதவியுடன் கங்கையைக் கடந்தது பற்றிய பாடல்களை இப்பகுதியே கூறியுள்ளது.

☞குகப்படலத்தில் (கங்கை காண் படலத்தில்) 01 – 43 வரையான பாடல்களை நாம் பாடப்பகுதியில் காணலாம்.

குகப்படலம் – கங்கைகாண் படலம்

(பாடல்களை அடிப்படையாக கொண்ட குறு வினா- விடை) .

பாடல் பகுதி 01 - 43 வரை

01.

பூவிரி பொலன் கழல் பொரு இல் தானையான்
காவிரி நாடு அன்ன கழனி நாடு ஒரீஇ
தாவரு சங்கமம் என்னும் தன்மைய
யாவையும் இரங்கிட கங்கை எய்தினான்.

அ. இப் பாடலில் பரதன் கங்கைக்கரை அடைந்த தன்மையை எடுத்துரைக்க?

☞ அசைகின்ற, (அதாவது, மனிதன், தேவர், மிருகங்கள், ஊர்வன, பறப்பன என்பன)அசையாத தன்மை கொண்ட (மரம், செடி, கொடி, தாவரங்கள்) அனைத்தும் இரங்கிட கங்கைக்கரை அடைந்தான்.

ஆ. பரதனின் சிறப்பினை எடுத்துரைக்க?

☞ பூ வேலைப்பாட்டினால் சிறப்புப் பெற்ற பொன்னால் செய்யப்பட்ட வீரக்கழலை அணிந்தவனும், ஒப்பற்ற சேனையைக் கொண்டவனுமாவான்.

02.

அப் படை கங்கையை அடைந்த ஆயிடை
துப்புடைக் கடலின் நீர் சுமந்த மேகத்தை
ஒப்புடை அண்ணலோடு உடற்றவோ கொலாம்
இப்படை எடுத்தது, என்று எடுத்த சீற்றத்தான்.

அ. குகன் கொண்ட சந்தேகம் யாது?

☞ பரதனின் இப் படையானது இங்கு வந்துள்ளது, நீர் சுமந்த கருமேகத்தை ஒத்த கரிய நிற மேனி படைத்த இராமபிரானோடு போர் செய்வதற்காகவோ? எனச் சந்தேகித்தான்.

ஆ.இப்பாடலில் வெளிப்படும் அணியினைக் குறிப்பிட்டு விளக்குக?

☞ நீரைச் சுமந்து சூல் கொண்ட கரு மேகம் போன்ற இராமன் திருமேனி கரிய நிறம் கொண்டதாக விளங்கியமை.

உவமானம் – நீர் சுமந்த கருமேகம்
உவமேயம் – இராமனின் திருமேனி
பொதுத்தன்மை – கருமை

03

குகன் எனப் பெயரிய கூற்றின் ஆற்றலான்
தொகை முரண் சேனையைத் துகளின் நோக்குவான்
நகை மிக கண்கள் தீ நாற நாசியில்
புகை உற குனிப்புறும் புருவப் போர்விலான்.

அ. இப் பாடலில், குகனின் சிறப்புக்களை குறிப்பிடுக?

ச இயமனை ஒத்த பெரும் பராக்கிரமம் படைத்தவன், மேலும், போர் செய்வதற்குரிய வளைந்த புருவம் எனும் வில்லை உடையவன்.

ஆ. பாடலில் புலப்படும் அணியினை குறிப்பிடுக?

உருவகம் – குனிப்புறும் புருவப் போர்விலான்.

04.

மருங்கு அடை தென் கரை வந்து தோன்றினான்
ஒருங்கு அடை நெடும் படை ஒல் என ஆர்ப்பினோடு
அருங் கடை யுகம் தனில் அசனி மா மழை
கருங்கடல் கீளர்ந்தெனக் கலந்து சூழவே

அ. இப்பாடல் இடம்பெற்ற சந்தர்ப்பம் யாது?

ச பரதனின் பெரும் சேனையைக் கண்டு குகன் தன் வலிமையான வேடுவச் சேனையோடு ஆரவாரத்துடன் கங்கையின் தென் கரையை வந்தடைந்த சந்தர்ப்பம்.

ஆ. இப்பாடலில் வெளிப்படும் உவமை அணியினை விளக்குக?

ச ஊழிக்காலத்தில், இடையோடு கூடிய மேகமும், கரிய கடல்களும் ஓசை செய்து மேலெழுவதைப் போல குகனது சேனை ஆரவாரத்துடன் குகனைச் சூழ வருதல்.

05.

அஞ்சன வண்ணன் என் ஆர் உயிர் நாயகன் ஆளாமே,
வஞ்சனையால் அரசு எய்திய மன்னரும் வந்தாரே,
செஞ்சரம் என்பன தீ உமிழ்கின்றன செல்லாவோ,
உஞ்சு இவர் போய் விடின் நாய்க்குகன் என்று எனை ஓதாரோ

அ. இப் பாடல் இடம்பெற்ற சந்தர்ப்பம் யாது?

☞ தன் வேடுவச் சேனையை ஒன்று திரட்டி அச் சேனையின் முன்பாக பரதன் வீர வார்த்தைகள் உரைக்கும் சந்தர்ப்பம்.

ஆ. இராமனின் சிறப்புக்களை எடுத்துரைக்க?

☞ மை போன்ற கரிய நிற மேனி படைத்தவன், குகன் மீது மிகுந்த அன்புடையவன்.

06.

கங்கை இரு கரை உடையான் கணக்கு இறந்த நாவாயன்
உங்கள் குலத் தனி நாதற்கு உயிர்த் துணைவன் உயர் தோளான்
வெம் கரியின் ஏறு அனையான் வில் பிடித்த வேலையினான்
கொங்கு அலரும் நறும் தண் தார்க் குகன் என்னும் குறி உடையான்

அ. இப்பாடல் இடம்பெற்றுள்ள சந்தர்ப்பம் பற்றி எடுத்துரைக்குக?

☞ சுமந்திரன் பரதனுக்கு முன் வந்து குகனைப் பற்றி எடுத்துரைக்கும் சந்தர்ப்பம்.

ஆ. குகனது சிறப்புக்கள் வெளிப்படும் தன்மையினை புலப்படுத்துக?

→ கங்கையாற்றின் ஆழத்தினை அளவிட்டவன்
→ அளவில்லாத படகுகளுக்கு சொந்தக் காரன்
→ மதம் கொண்ட கொடிய யானையைப் போன்றவன்
→ வாசனை மிக்க குவிந்த மலர்மாலை அணிந்தவன்

07.

கல் காணும் திண்மையான் கரை காணாக் காதலன்
அல் கண்டனைய அழகு அமைந்த மேனியான்
மல் காணும் திரு நெடுந் தோள் மழை காணும் மணி நிறத்தாய்
நிற் காணும் உள்ளத்தான் நெறி எதிர் நின்றனன் என்றான்.

அ. இப் பாடல் இடம்பெறும் சந்தர்ப்பம் யாது?

வடகரையில் வந்துள்ள குகன் குறித்து சுமந்திரன் பரதனிடம் கூறத் தொடங்குதல்

ஆ. கல் காணும் திண்மையான் யார்?

குகன்

08.

அல்லை ஆண்டு அமைந்த மேனி அழகனும் அவளும் துஞ்ச
வில்லை ஊன்றிய கையோடும் வெய்து உயிர்ப்போடும் வீரன்
கல்லை ஆண்டு உயர்ந்த தோளாய் கண்கள் நீர் சொரிய கங்குல்
எல்லை காண்பு அளவும் நின்றான் இமைப்பிலன் நயனம் என்றான்.

அ. இப் பாடல் இடம்பெற்ற சந்தர்ப்பம் யாது?

- இலக்குவனன் யாது செய்தனன் என பரதன் குகனிடம் வினவ அதற்கு குகன் பதிலவித்தல்.

ஆ.அல்லை ஆண்டு அமைந்த மேனி அழகன் யார்?

- இராமன்

இ. கல்லை ஆண்டு உயர்ந்த தோளன் யார்?

- பரதன்

ஈ. இலக்குவனன் செயல் குறித்து குகன் யாது கூறினான்?

- இராமனும், சீதையும் உறக்கம் கொள்ள, வில்லின் மீது வைத்த கையுடன், பெரு மூச்சுடையவனாக, தன் இரு கண்களிலும் நீர் சொரிய இரவு கழியும் வரையும் கண்கள் மூடாது காவல் செய்தான்.

09.

வற்கலையின் உடையானை மாசு அடைந்த மெய்யானை
நற் கலை இல் மதி என்ன நகை இழந்த முகத்தானை
கல் கனியக் கனிகின்ற துயரானை கண்ணுற்றான்
வில் கையினின்று இடை வீழ விம்முற்று நின்று ஒழிந்தான்

அ.பரதனின் கோலம் பற்றி எடுத்துரைக்குக?

- மரவுரி ஆடை தரித்து, புழுதி படிந்த உடம்பையுடையவனாய், ஒளியற்ற சந்திரனைப் போன்ற ஒளி இழந்த முகம் படைத்தவனாக விளங்கினான்.

ஆ..இப் பாடலில் இடம்பெறும் அணியினை விளக்குக?

- உவமையணி

- நற் கலை இல் மதி என்ன நகை இழந்த முகத்தானை..

உவமானம் – நற்க் கலை இழந்த மதி
உவமேயம் – அழகு இழந்த முகத்தை உடைய பரதன்
பொதுத்தன்மை – ஒளி இழந்த தன்மை, அழகு குன்றிய நிலை

குகப் படலம் (கங்கை காண்படலம்)

பாடல் பகுதி 01 – 43

கட்டமைப்பு வினாக்கள்

📖 01. குகப்படலத்தில், பரதன் கங்கை கரையடைந்தது முதல் குகன் கங்கையின் தென்கரை வந்தடைந்தது வரையான [01 – 11 வரையான பாடல்கள்] பகுதியை அடிப்படையாக கொண்டு,

01. பரதன் கங்கைக் கரை அடைந்த தன்மையினை தெளிவுறுத்துக?

பூ வேலைப் பாடுகளால் சிறப்புற்ற வீரக்கழலை தன் கால்களில் அணிந்த பரதன் காவிரி ஆறு பாய்ந்து ஓடுகின்ற சோழ நாட்டினை ஒத்த வயல்கள் பல நிறைந்த கோசல நாட்டினை நீங்கி பூமியில் அசையாத தன்மைகளான மரம், செடி, கொடி முதலியவையும், அசைகின்ற தன்மைகள் எனப்படும் மனிதர், விலங்கு, பறவை, தேவர் முதலியவையும் வருத்தமடைய கங்கைக் கரையினை வந்தடைந்தான். இதனை,

"தாவர சங்கமம் எனும் தன்மைய யாவையும்
இரங்கிட கங்கை எய்தினான்...

எனும் பாடிலடிகள் வாயிலாக அறியலாம்.

02. பரதனது சேனை பற்றிய வர்ணிப்பினை எடுத்துக்காட்டுக?

காட்டிற்கு சென்ற இராமபிரானைத் தேடி அவன் சென்ற வழியில் பின்தொடர்ந்து சென்ற சேனையின் சிறப்பு மிகுந்த வர்ணிப்பின் பாங்கினை கம்பர் அழகுற இங்கு காப்பியம் செய்கின்றார். குதிரைப்படை, யானைப்படை, தேர்ப்படை, காலாட்படை எனும் நாற்படைகளையும் கொண்டமைந்ததாகவும் பரதனின் சேனை விளங்கியது.

→ யானைப் படையின் வர்ணிப்பு

பரதனின் அளவிட முடியாத சேனையில் அங்கம் பெற்ற யானைப் படையின் சிறப்பினை பின்வரும் பாடல் வாயிலாக காணலாம்.

எண்ண அருஞ் சுரும்பு தம் இனத்துக்கு அல்லது
கண் அகன் பெரும் புனல் கங்கை எங்கணும்
அண்ணல் வெங் கரி மதத்து அருவி பாய்தலால்
உண்ணவும் குடையவும் உரித்தன்று ஆயதே

பாடல்

அதாவது, இடம் அகன்ற அதிகளவு நீரை கொண்ட கங்கை ஆற்றின் எல்லா இடங்களிலும், பெருமை மிக்க கொடிய யானைகளின் மத நீராகிய அருவி பாய்வதனால் எண்ணிக் கணக்கிட முடியாத வண்டுக் கூட்டங்களிற்கும், ஏனைய உயிரினங்களிற்கும் குடிக்கவும், குளித்து மூழ்கவும் உரிமை இல்லாது போய்விட்டது என யானைப்படையின் வர்ணிப்பை காப்பியம் செய்கின்றார் கம்பர். இங்கு யானைகளின் மத நீராகிய அருவி கங்கையாற்றின் எல்லாப் பகுதியிலும் சென்று கலந்தது என உயர்வு நவிற்சியணி வாயிலாக அச் சிறப்பு வெளிப்படுகின்றது.

→ குதிரைப் படையின் வர்ணிப்பு

பரதனுடன் வந்த சேனையில் அங்கம் வகித்த குதிரைப் படையின் சிறப்பினை நோக்கும் போது, அக் குதிரைகளின் கால்களில் இருந்து எழுந்த தூளியானது (புழுதி) வானுலகில் உள்ள தேவர் உலகத்தில் புகுந்து அங்கிருந்த தேவர்களின் முடிகளில் படிந்தன. இவ்வாறாக நிலவுலகில் பெருமூச்சு விட்டுக் கொண்டு நின்றனவும், நீரைப் பருகியவையும், நீரில் நீந்திக் கொண்டு நின்றனவும், நிலத்தில் புரண்டபடி இருந்தவை அனைத்துமே குதிரைகளின் கூட்டமேயாகும். இதனை,

நெடிது உயிர்த்து உண்டவும் நீந்தி நின்றவும்
பொடி மிசை புரண்டவும் புரவி ஈட்டமே.

எனும் பாடலடிகள் மூலம் அறியலாம்.

இவ்வாறு பரதனின் எல்லையற்ற சேனையாகிய கடலானது கங்கையாற்றின் நீரினை குடித்தமையால் அக் கங்கையாற்றின் நீர் வழக்கம் போல் சென்றடையும் சமுத்திரத்தை சென்றடையாது போய்விட்டது என அச் சேனையின் எண்ணிக்கையை உயர்வு படுத்தி சிறப்பிக்கின்றார் கம்பர்.

அடுத்து, பரதனுடன் அக் கங்கைக் கரையினை வந்தடைந்த சேனையின் எண்ணிக்கை ஆன்றோரால் கணக்கீட்டுக் கூறும் படியாக அறுபதினாயிரம் அக்ரோணிகள் கொண்டமைந்த பெரும் சேனையாக விளங்கியது என அழகுற கம்பர் எடுத்துரைக்கின்றார்.

3. பரதன் சேனையைக் கண்ட குகனது சந்தேகம் பற்றி எடுத்துரைக்குக?

பரதனின் அளவிட முடியாத பெரும் சேனையைக் கண்ட குகன், இப் பெரும் சேனை, பலத்தை உடைய வலிமையான கடலின் நீரினை மிகுதியாக பருகி சூல் கொண்ட கரு மேகத்தை ஒப்பு உவமையாக கொண்ட இராமபிரானோடு போர் புரிவதற்காகவே இவ்விடம் வந்துள்ளது என தன் மனத்திடை சந்தேகம் கொண்டான். இதனை,

ஒப்புடை அண்ணலோடு உடற்றவோ கொலாம்
இப்படை எடுத்தது, என்று எடுத்த சிற்றத்தான்.

எனும் பாடலடிகள் புலப்படுத்துகின்றன.

04. பரதன் சேனையைக் கண்ட குகன் அடைந்த கோபம் பற்றி தெளிவுறுத்துக?

பரதனின் கணக்கிட முடியாத சேனையைக் கண்ட, குகன் அப் படை இராமனுடன் போர் செய்வதற்காகவோ வந்துள்ளது எனக் கருதி மிகுதியாக கோபமடைகின்றான். இத்தகு நிலையினை கம்பர் அழகுற கவியுறுத்துகின்றார்.

இயமனைப் போன்ற வலிமை பொருந்தியவனாகிய வேடுவர் குலத் தலைவனாம் குகன், பரதனின் பெரும் சேனையை ஒரு தூசியைப் போல நோக்கினான். அப்போது அவனுக்கு இகழ்ச்சியான சிரிப்பு உண்டாகவும், கண்களில் கோபத்தினால் தீப் பொறிகள் தோன்றவும், அக் கோபம் மிகுதியடைந்து மூக்கிலிருந்து புகையாக வெளிவரவும், வளைந்த தன் புருவமாகிய போர் செய்யும் வில்லை உடையவனாக குகன் விளங்கினான். இதனை,

குகன் எனப் பெயரிய கூற்றின் ஆற்றலான்
தொகை முரண் சேனையைத் துகளின் நோக்குவான்
நகை மிக கண்கள் தீ நாற நாசியில்
புகை உற குனிப்புறும் புருவப் போர்விலான்.

எனவாறு கவி வடிக்கின்றார். கம்பர்.

மேலும், வில் வித்தையில் தேர்ச்சியுடையவனாகிய குகன், இறுதிக் காலத்தில் உயிர்களை எல்லாம் உடல்களில் இருந்து எடுத்துச் செல்லுகின்ற கையில் முத்தலை சூலாயுதத்தை தாங்கிய இயமனே, அழகிய ஐந்து இலட்சம் வடிவங்கள் எடுத்ததைப் போன்று வலிமையான உடலினைக் கொண்ட வேடுவச் சேனையைக் கொண்டவனாக விளங்கினான்.

இது மட்டுமன்றி, தன் இடையில் கட்டப்பட்டுள்ள உடைவாளையும், பற்களால் உதட்டைக் கடித்துக் கொண்டிருக்கும் வாயினையும், கடிந்து பேசுகின்ற சொற்களை உடையவனாகவும், கண்கள் விழித்துப் பார்ப்பதனால் தீப் பொறி பறக்கும் தன்மை கொண்டவனாகவும், அடிக்கின்ற உடுக்கையையும், ஒலி செய்யும் ஊது கொம்பினையும் கொண்டு, போரானது அருகில் வந்துவிட்டது என மகிழ்ச்சியடைந்து மேல் எழும்பும் தோள்களைக் கொண்டவனாகவும் குகன் விளங்கினான் என்கின்றார் கம்பர்.

கட்டிய கரிகையன் கடித்த வாயினன்
வெட்டிய மொழியினன் விழிக்கும் தீயினன்
கொட்டிய தூடியினன் குறிக்கும் கொம்பினன்
கிட்டியது அமர் எனக் கிளரும் தோளினான்.

அடுத்து, பரதனின் சேனைகள் எல்லாம் எலிகள். நான் அவற்றை தின்றொழிக்கும் பாம்பாவேன் எனக் கூறி நின்றான் குகன்.
மேலும், வலிமை மிக்க நகங்களைக் கொண்ட புலிகள் எல்லாம் ஓரிடத்தில் ஒன்று கூடியதைப் போல தன் வேடுவ சேனையை ஆரவாரத்துடன் போர் செய்யக் கருதி அழைத்து நின்றான். இதுவும் குகனது கோபத்தின் வெளிப்பாடாகும்.

05. குகனது படை பற்றிய சிறப்பினை கம்பர் எவ்வாறு வர்ணிப்புச் செய்கின்றார்?

பரதனது சேனையைக் கண்ட வலிமையான தோள்களைக் கொண்ட குகன் அப் படை இராமபிரானுடன் போர் புரிவதற்காகவே வந்துள்ளது எனக் கருதி, அப் படையுடன் போர் செய்வதற்காக தன் வலிமையான வேடுவர்களைக் கொண்ட வேடுவ சேனையை ஒன்று தீரட்டினான். அத்தகைய குகனது படைச் சிறப்பினை பினவருமாறு நோக்குவோம்.

உலகில் வாழுகின்ற வன்மையான நகங்களைக் கொண்ட புலிகள் அனைத்தும் ஒரே இடத்தில் ஒன்று சூடியதைப் போல குகனது வலிமைய வேடுவ சேனையானது ஆரவாரத்துடன் போர் செய்வதற்கு ஒன்று சூடியது என்கின்றார் கம்பர். இதனை,

வலி உளாம் உலகினில் வாழும் வவ் உகிர்ப்
புலி எலாம் ஒரு வழிப் புகுந்த போலவே..

எனும் பாடலடிகள் வாயிலாக அறிய முடியும்.

மேலும், ஊழிக் காலத்தில், இடியோடு சூடிய மேகக் கூட்டங்களும், கரிய கடலும், ஒலி செய்து மிகுதியாக எழுந்ததைப் போல ஓல் என்று பேராரவாரத்துடன் குகனது சேனை ஒன்று சேர்ந்து கங்கையின் தென் கரையில் ஒன்று சூடியது. இதனை,

அருங் கடை யுகம் தனில் அசனி மா மழை
கருங்கடல் கிவர்ந்தெனக் கலந்து சூழவே..

எனவாறு காணலாம்.

இவற்றுடன், இறுதிக் காலத்தில், உயிர்களை எடுக்கின்ற, தன் கையில் சூளாயுதத்தை தன் கையில் ஏந்திய இயமன், ஐந்து இலட்சம் உருவம் எடுத்ததைப் போல குகனது சேனை வீரர்கள் காட்சியளித்தனர் எனக் கூறுவதும் குகனின் சேனை பற்றிய வர்ணிப்பேயாகும்.

06. இப்பகுதியில் வெளிப்படும் அணிகள் பற்றி தெளிவுறுத்துக?

குகப்படலத்தின் 01 – 11 வரையான பாடல்களில் வெளிப்படும் அணிகளை பற்றி இங்கு காண்போம்.

<u>உவமையணி.</u>

1. கோசல நாட்டை ஒத்த கோசலை நாடு
" காவிரி நாடன்ன கழனி நாடு..

2. நீரைச் சுமந்து சூல் கொண்ட கரு மேகம் போன்ற இராமன் திருமேனி
" நீர் சுமந்த மேகத்தை ஒப்புடை அண்ணல்..
உவமானம் – நீர் சுமந்த கருமேகம்
உவமேயம் – இராமனின் திருமேனி
பொதுத்தன்மை – கருமை,

3. இயமனை ஒத்த ஆற்றலுடையவனாக குகன் உவமிக்கப்பட்டிருத்தல்.

" கூற்றின் ஆற்றலான்...

உவமானம் – இயமன்
உவமேயம் – குகன்
பொதுத்தன்மை – ஆற்றல்

4. இயமன் ஐந்து இலட்சம் உருவம் எடுத்ததைப் போல குகனது சேனை விளங்குதல்

" காலன் தான் ஐ ஐந்நூறாயிரம் உருவம் எடுத்த..

உவமானம் – இயமன் ஐந்து இலட்சம் வடிவெடுத்தல்
உவமேயம் – குகனது சேனை
பொதுத்தன்மை – எண்ணற்ற தன்மை

5. ஊழிக் கால முடிவில் கடலும், மேகமும் கிளர்ந்தெழுந்து ஓசை செய்வதைப் போல குகனின் சேனை ஆரவாரம் செய்தல்.

" கடையுகம் தனில் அசனி மாமழை கருங்கடல் கிளர்ந்தென..

உவமானம் – கடலும், மேகமும் கிளர்ந்து ஓசை செய்தல்
உவமேயம் – குகனது சேனை ஆரவாரம் செய்தல்
பொதுத்தன்மை – ஆரவாரம்.

<u>உருவக அணிகள்.</u>

1. வெங்கரி மதத்து அருவி – யானையின் மத நீராகிய அருவி
2. சேனையாம் வேலையே – சேனையாகிய கடல்
3. புருவப் போர்விலான் – புருவமாகிய போர் செய்யும் வில்

<u>உயர்வுநவிற்சியணி</u>

1. பரதனின் சேனை பற்றிய வர்ணிப்பில் பாடல் 02 – 05 வரையான பாடல்களில் உயர்வு நவிற்சியணி வெளிப்படுகின்றது.

❁ பரதனின் சேனையில் உள்ள யானைகளின் மதநீரானது கங்கையில் எங்கும் ஓடி பரவுதல்.

❁ பரதனின் சேனையில் உள்ள குதிரைகளின் காலடித் தூசி தேவர் உலகில் சென்று படிதல்.

❁ பரதனின் சேனையாகிய கடல் கங்கையாற்றில் வியாபித்தல். அதாவது கங்கையாற்றை குடித்துவிடல்

❁ பரதனின் சேனை அறுபதினாயிரம் அக்ரோணி எண்ணிக்கை கொண்டிருந்ததாக கூறுதல்.

❁❁❁

02. கம்பராமாயணம் குகப்படலத்தில், குகன் தன் சேனைகளைத் திரட்டி அவர்களுக்கு கட்டளையிட்டு அவர்கள் முன் வீரவசனம் உரைப்பது வரையான [12 – 23 வரையான பாடல்கள்] பகுதியை அடிப்படையாக கொண்டு,

1. குகன் தன் இளைத்தவரான வேடுவர்க்கு இட்ட கட்டளை பற்றி எடுத்துரைக்குக?

பரதனின் பெரும் சேனையைக் கண்ட குகன் அப்படை இராமனுடன் போர் செய்வதற்காகவே இங்கு வந்துள்ளது எனக் கருதி அதனை தடுத்து நிறுத்த தன் வேடுவ சேனையை ஒன்று திரட்டி அவர்களுக்கு ஒரு சில கட்டளைகளை இடத் தொடங்கினான். இவற்றை பாடல் 12, 13 ஆகியவற்றில் காணலாம். .

இராமபிரானுடன் போர் புரிவதற்காக கங்கையின் வடகரையினை நிலை கொண்டுள்ள பரதனின் சேனையோடு போர் செய்து அவர்களை கொன்று வீர சுவர்க்கம் அனுப்பி வைக்கவும், நிலையான ஆட்சியுரிமையை என் உயிர் போன்ற தோழனாகிய இராமபிரானுக்கு அளிக்கும் முகமாகவும் நான் செயலாற்றத் தொடங்கியுள்ளேன்.நீங்களும் அதற்கு உடன்படுவீர்களாக எனத் தன் சேனைக்கு கட்டளையிட்டான் குகன்.

மேலும், தன் சேனையிடம், போர் பறைகளை அடித்து ஒலி செய்யுங்கள். பரதன் வட கரையிலிருந்து தென்கரை நோக்கி வரும் வழிகளையும், துறைகளையும் மறித்து விடுங்கள், மேலும், தோணிகள் ஒன்றையும் கங்கையாற்றில் விரைவாக ஓட்டாதீர்கள், தென்கரைக்கு விரைந்து வரும் பரதனின் சேனையாட்களை பிடித்து அவர்கள் உயிரைப் பறியுங்கள் என வீரம் பொங்க தன் சேனைக்கு கட்டளை பிறப்பித்தான் வேடுவர் கோன் குகன். இவற்றை,

தடி எறி நெறிகளும் துறையும் சுற்றுற
ஒடி எறி அம்பிகள் யாதும் ஓட்டலீர்
கடி எறி கங்கையின் கரை வந்தோர்களைப்
பிடி எறி பட எனாப் பெயர்த்தும் கூறுவான்

எனும் பாடலடிகள் வாயிலாக காணுறுவோம்.

2. குகன் தன் வேடுவர் சேனை முன் உரைத்த வீர வார்த்தைகளை எடுத்துக்காட்டுக?

பரதனின் சேனையைக் கண்டு அச் சேனையுடன் போர் செய்வதற்காக தனது வலிமையான சேனையை தன் முன்பாக அழைத்து அந்த சேனை வீரர்களிடம் பின்வரும் வீர வார்த்தைகளை வேடுவர் குலத் தலைவன் குகன் மொழியத் தொடங்கினான்.

→ என் அரிய உயிர்த்துணைவனாகிய, மை போன்ற கரிய நிறம் படைத்த இராமபிரான் ஆட்சியுரிமை ஆட்சியுரிமை பெற முடியாதபடி சூழ்ச்சியினால் அவ் ஆட்சியுரிமையைக் கைப்பற்றிய பரதன் இங்கு சேனையுடன் வந்துள்ளான். அவர்கள் மேல் நெருப்பைக் கக்கும் சீவந்த அம்புகள் பாயாமல் போய்விடுமோ? இவர்கள் இங்கிருந்து தப்பி என்னைத் தாண்டி இராமன் இருக்கும் இடம் சென்று விட்டால் உலகத்தவர் என்னை நாய் போன்ற கீழ்க் குணம் படைத்தவன் எனக் கூறமாட்டாரோ? என உரைத்தான். இதனை,

அஞ்சன வண்ணன் எனக் ஆர் உயிர் நாயகன் ஆவாமே,
வஞ்சனையால் அரசு எய்திய மன்னரும் வந்தாரே,
செஞ்சரம் என்பன தீ உமிழ்கின்றன செல்லாவோ,
உஞ்சு இவர் போய் விடின் நாய்க்குகன் என்று எனை ஓதாரோ? – 14

எனும் பாடல் கவிறுத்துகின்றது.

→ மேலும், நீண்ட அலைகளைக் கொண்ட கங்கையாற்றினைக் கடந்து, இவர்கள் அக்கரைக்கு செல்வார்களோ?, இவர்களின் யானைப் படையைக் கண்டு பயந்து புறமுதுகு காட்டி செல்லும் வில் வீரனோ நான், இராமபிரான் என் மீது கொண்ட நட்புக்கு மாறாக இவர்கள் என்னைக் கடந்து சென்றால் உலகத்தவர்கள், மானமிழந்தவன் என பழிப்பார்கள் என குகன் கூறி நின்றான்.

→ அடுத்து, இந்தப் பரதன், இராமன் தன் அண்ணன் என்பதை நினைக்கவில்லை. வலிமை பொருந்திய புலியினை ஒத்த இலக்குவன் அவனுக்கு துணையாக உள்ளான் என்பதை கருதவில்லை. அவர்களை நினைக்காவிடாலும் பரவாயில்லை, என்னையும் ஒரு பொருட்டாக எண்ணி மதியாது, இராமன் இருப்பிடம் செல்லத் துணிகின்றான். எனது எல்லையைக் கடந்து சென்றால் அல்லவா அது நிகழும் என முழங்கினான் குகன். இதனை,

முன்னவன்என்று நினைத்திலன் மொய் புலி
அன்னான் ஓர் பின்னவன் நின்றனன்.. (பாடல் 16) எனத் தொடங்கும் பாடல் வாயிலாக காணலாம்.

→ மேலும் குகன், இவர்கள், என் அரிய உயிரை ஒத்த நட்புறவைத் தந்த இராமபிரான் மேல் போர் தொடுத்துச் செல்வது, தம்முடைய அரிய உயிரையும், சேனைகளையும் என்னிடம் இருந்து தப்பி கொண்டு சென்றால் அல்லவா முடியும் எனக் கூறினான்.

→ மேலும், இராம இலக்குவனர்களோடு நான் வனம் நோக்கி உடன் செல்லாதிருந்தது நன்மையாகி விட்டது. இராமனுக்காக இப் பரதனுடன் போர் செய்து, இராமனுக்காக செய்ய வேண்டிய கடமையை இன்று செய்து முடிப்பேன் எனவும் உரைத்தான் குகன்.

→ பரதனின் பெரும் சேனை தம் ஆற்றலை இக் கங்கையைக் கடந்து சென்றால் அல்லவா காட்ட முடியும், நீங்கள் (வேடுவர்கள்) கங்கை நீர்த்துறையில் இவர்களுக்கு ஓடம் விடுவதை நிறுத்தி விடுங்கள் எனவும் குகன் கூறினான்.

→ தேவர்கள் படையெடுத்து வந்தாலும், என் வில்லாகிய கரிய மேகம் அம்பு மழையை பொழிந்து அவர்களை தோல்வியடையச் செய்யும். அப்படியிருக்க இவர்களது பெரும் சேனையை நான் நிலை குலைக்காமல் விட்டுவிடுவேனா? எனவும் குகன் உரைத்தான்.

→ இது மட்டுமன்றி, இப் பரதனின் பெரும் சேனையை என் அம்பால் கொன்று, குவியல் செய்து, அப் பிணங்களின் குவியலை இந்தக் கங்கையாறானது இழுத்துச் சென்று விரைவாக ஓடிச் சென்று நெருங்கிய அலைகளை உடைய கடலில் அவற்றை சேர்ப்பித்து அவற்றை தூர்த்து விடும். என வீர வசனம் உரைத்தான் குகன்.

→ மேலும், குகன் தன் படை வீரர்களான வேடுவர்களிடம், பரதனின் சேனையைக் கொன்றொழித்து தருமத்தின் துணைவர்களான இராம, இலக்குவனர்கள் ஆட்சி செய்யும் படி இப் பூமியை மீட்டுக் கொடுத்தனர் இந்த வேடுவர்கள் எனும் புகழை அடையுங்கள் எனக் கூறினான்.

இவ்வாற கோபம் மேலெழ, தன் வேடுவச் சேனையின் முன்னால் தன் வாயில் இருந்து பற்பல வீர வார்த்தைகளை வீரம் பொங்க மொழிந்து நின்ற தன்மைகளை கம்பர் அழகுற கவியுறுத்தியுள்ளார்.

03. இராமன் மீது குகன் கொண்ட அன்பு இப்பகுதியில் எவ்வாறு புலப்படுகின்றது?

இப் பகுதியில் குகன் இராமன் மீது கொண்ட பேரன்பு வெளிப்படும் தன்மையினை காண்போம்.

→ தன்னுடைய உயிர் போன்ற துணைவன் இராமன் எனக் கூறுதல்
பாடல் 14

→ தன்னுடன் இராமன் கொண்ட தோழமையை உயர்வாக கருதியவன் குகன் .
பாடல் 15

→ என் உயிர்த் துணைவனாகிய இராமன் மீது போர் தொடுத்துச் செல்வது என்னிடம் இருந்து தப்பித்துச் சென்றால் அல்லவா முடியும் எனக் கூறுதல் .
பாடல் 17

→ இராமனுக்காக பரதனது சேனையோடு போர் செய்து இராமனுக்கு முன்பாகவே இறப்பது நல்லதல்லவா? எனக் கூறுகின்றான் குகன்
பாடல் 19

03. கம்பராமாயணம் குகப்படலத்தில், குகனைக் குறித்து சுமந்திரன் பரதனுக்கு கூறுவது முதல், இராமன் நிலையறிந்து பரதன் துயரமடைதல் வரையான (24- 43) பாடல்களை அடிப்படையாகக் கொண்டு,

1. குகனைப் பற்றி சுமந்திரன் பரதனுக்கு உரைக்கும் தன்மையினை எடுத்துரைக்குக?

தன் சேனை வீரர்கள் முன்பாக வீர வசனம் உரைக்கின்ற குகனது கோலத்தினைக் கண்ட, விரைவாக தேர் ஓட்டுவதில் தேர்ச்சியுடைய சுமந்திரன் ஆண் சிங்கத்தை போன்ற வலிமை உடைய பரதன் முன் வந்து குகனைப் பற்றி பின்வருமாறு கூறுவான்.

கங்கை இரு கரை உடையான் கணக்கு இறந்த நாவாயன்
உங்கள் குலத் தனி நாதற்கு உயிர்த் துணைவன் உயர் தோளான்
வெம் கரியின் ஏறு அனையான் வில் பிடித்த வேலையினான்
கொங்கு அலரும் நறும் தண் தார்க் குகன் என்னும் குறி உடையான்

அதாவது, கங்கையாற்றின் இரு கரைகளிலும் உள்ள நிலங்களை தனக்குச் சொந்தமாகக் கொண்டவன். கணக்கில்லாத படகுகளை உடையவன். உங்கள் சூரிய வம்சத்தில் அவதாரம் செய்த இராமபிரானுக்கு உயிர்த் தோழன். ஊயரிய தோள்களைக் கொண்டவன். மதம் கொண்ட கொடிய ஆண் யானை ஒத்தவன், வில்லேந்திய வேடுவச் சேனையைக் கொண்டவன், மலரிதழ்களால் தொடுக்கப்பட்ட குளிர்ச்சி பொருந்த வாசனையான மலர்மாலையைச் சூடியவன், குகன் எனும் பெயர் படைத்தவன் என குகனைப் பற்றிய சிறப்புக்களை பரதனிடம் அடுக்கினான் சுமந்திரன்.

2.பரதனின் நிலையினைக் கண்டு குகன் திகைப்படைந்து பின் துன்பமடைதல் என்பன பற்றி விளக்குக?

குகன் பற்றி அறிந்து கொண்ட பரதன், உடனே அவனைக் காண்பதற்கு இச்சை கொண்டு உள்ளத்தில் அதிகரிக்கும் பேரன்புடன், தன் தம்பி சத்ருக்கனுடன் குளிர்ச்சி பொருந்திய கங்கையின் வடகரையினை நோக்கி விரைந்து வந்தான். இவ்வாறு அங்கு வந்தடைந்த பரதனை தென் கரையில் நின்ற குகன் கண்ணுற்று, வாடிச் சோர்ந்துள்ள பரதனின் திருமேனியழகை கண்டு தன் அனுபவத்தால் உணர்ந்து திடுக்குற்றான்.

எழுந்த தம்பியொடும் எழுகின்ற காதலொடும்
குன்று எழுந்து சென்றது எனக் குவிர் கங்கைக் கரை குறுகி
நின்றவனை நோக்கினான் திரு மேனி நிலை உணர்ந்தான்
துன்று கரு குஞ்சி எயினர் கோன் துணைனென்றான்.

மேலும், இராமனைப் போலவே மரவுரி உடுத்து, புழுதி படிந்த உடம்பையுடையவனாக நல்ல கலைகள் இல்லாத ஒளியற்ற சந்திரனைப் போல ஒளி இழந்த முகத்தை கொண்டவனாக, கல்லும் கரைந்து உருகும் படி குழைந்து உருகும் துன்பத்தை உடைய, பரதனை குகன் தன் கண்ணால் பார்த்து, தன் கையிலிருந்த வில்லானது தானாகவே கீழே விழும்படி துன்பத்தால் கலக்கமுற்று ஒரு செயலுமற்று நின்ற பரதனைக் கண்டு குகன் வருத்தமடைந்தான். இதனை,

வற்கலையின் உடையானை மாசு அடைந்த மெய்யானை
நற் கலை இல் மதி என்ன நகை இழந்த முகத்தானை
கல் கனியக் கனிகின்ற துயரானை கண்ணுற்றான்
வில் கையினின்று இடை வீழ விம்முற்று நின்று ஒழிந்தான்..

எனக் கம்பர் கவி வடிக்கின்றார்.

3. குகனும் பரதனும் ஒருவரை ஒருவர் வணங்கித் தழுவும் தன்மையினை எடுத்துக்காட்டுக?

கங்கையாற்றின் வடகரைக்கு வந்து, தன்னை எதிர் நின்று வணங்கிய பரதனைக் குகன் வணங்கினான்.திருமாலின் நாபிக்கமலத்தில் வீற்றிருக்கும் வேதியனான பிரம்மதேவரும், தன்னை வணங்கும் சிறப்புப் பொருந்திய பரதன், அக் குகனின் திருவடிகளில் வீழ்ந்து வணங்கினான். இது கண்ட, சிறந்த மேலோர்கள் மனத்தால் போற்றும் சிறப்புடைய குகனும், பெற்ற தாயிலும் பார்க்க மகிழ்ச்சி அதிகரிக்க அப் பரதனை தன் மார்போடு தூக்கி அணைத்துக் கொண்டான். இதனை,

வந்து எதிரே தொழுதானை வணங்கினான் மலர் இருந்த
அந்தணனும் தனை வணங்கும், அவனும் அவன் அடி வீழ்ந்தான்
தந்தையினும் களிகூர தழுவினான் தகவு உடையோர்
சிந்தையிலும் சென்னியினும் வீற்றிருக்கும் சீர்த்தியான்.

எனவாறு கவியுறுத்துகின்றார் கம்பர்.

4. பரதனிடம் குகனது வினாவும் அதற்கு பரதனின் விடையளித்த தன்மையினை புலப்படுத்துக?

அச் சமயம் வேடுவர் குலத் தலைவனாகிய குகன், செந்தாரை போன்ற கண்களைக் கொண்ட பரதனிடம், வலிமை மிக்க தோள்களை உடையவனே, இக் கங்கையாற்றின் கரையின் காட்டுக்கு தாம் வந்த காரணம் யாதென வினவி நிற்க, அதற்கு பரதனும், இவ் உலகம் முழுவதையும் ஒரே குடையின் கீழ் ஆட்சி செய்த சக்கரவர்த்தியான தசரதன் முந்தையவர் காட்டிய வழியில் நின்று தவறி விட்டான், அந்த அநீதியை நீக்கும் பொருட்டு, முறைப்படி அடுத்து ஆட்சி செய்ய வேண்டிய அண்ணன் இராமனை திரும்ப அழைத்துக் கொண்டு செல்வதற்காக இங்கு வந்துள்ளேன் என்றான் பரதன், இதனை,

தாமரைச் செங்கணானை எழுவினும் உயிர்ந்த தோளாய்,
எய்தியது என்னை? என்ன, முழுது உலகு அளித்த தந்தை
முந்தையோர் முறையினின்றும் வழுவினன்,
அதனை நீக்க மன்னனைக் கொணர்வான் என்றான்..

எனவாறு காணலாம்.

5. பரதனின் பதிலைக் கேட்டு குகன் பரதனிடம் மனம் நெகிழ்ந்து கூறிய வார்த்தைகள் (பரதன் குறித்த குகனது மனப்பதிவு) பற்றிக் குறிப்பிடுக?

பரதன் இவ்வாறு உரைத்ததைக் கேட்ட வேடுவர் தலைவனாகிய குகன், மேலெழும் பெருமூச்சு உடையவனாகி திரும்பவும், பரதனை முன்னர் வணங்கியதைக் காட்டிலும் அதிகமாக வணங்கினான். பரதனின் திருவடிகளைத் தழுவிய கைகளுடன் பின்வரும் வார்த்தைகளை பரதனிடத்தில் கூறுவான்.

→ உன் தாய் கைகேயியின் வார்த்தைகளைக் கேட்டு உன் தந்தை தசரதன் அளித்த கோசல நாட்டு அரசுரிமையை தீயவினை வந்து சேர்ந்தது எனக் கருதி அதனைக் கைவிட்டு முகத்தில் கவலை கொண்டவனாய், விளங்கும் உன் நல்லியல்புகளை அறிந்து ஆராய்ந்தால் ஆயிரம் இராமனும் உன் ஒருவனுக்கு சமம் ஆவாரோ? எனக் கூறினான்.

→மேலும், பரதனை நோக்கி குகன், உயர்வான உத்தம குணங்களையும், வலிமையான தோளையும் உடையவனே, சூரியன் தன் புகழாகிய ஒளித் தொகுதியால் மற்றைய கோள்கள் மற்றும் உடுக்களை அடக்கி மேல் செல்வது போல எல்லா அரசர்களாலும் பாராட்டப் பெறும் பெருமை படைத்த உங்கள் சூரிய வம்சத்து முன்னைய அரசர்களின் எல்லா புகழ்களையும் உனது ஒருவனது புகழுக்குள் அடங்குமாறு செய்து கொண்டாய் எனக் கூறினான் குகன்.

மன் புகழ் பெருமை நுங்கள் மரபினோர்
புகழ்கள் எல்லாம், உன் புகழ் ஆக்கிக்
கொண்டாய் உயர் குணத்து அரவுத் தோளாய்..

எனவாறு காட்டுகின்றார் கம்பர்.

6. குகன் பரதனுக்கு இராமன் தங்கிய இடத்தைக் காட்டவும் அது கண்ட பரதனின் வருத்தம் பற்றியும் எடுத்துரைக்க?

எப்போதும் நேர் வழியில் செல்லும் மனம் படைத்த பரதன் குகளிடம், இராமன் தங்கிய இடம் யாது எனக் கேட்க அதற்கு குகனும், இராமன் தங்கிய இடத்தை அப் பரதன் கானும்கடி காண்பித்தான். அக் கணம் பரதன் தன் அண்ணன் இராமன் தங்கியிருந்த கற்களின் மேல் பரப்பப்பட்ட புற்களால் ஆகிய படுக்கையைப் பார்த்து நிலத்தின் மீது துடிதுடித்து வீழ்ந்து, துன்பம் எனும் கடலில் சென்று, நீர் நிறைகின்ற கண்களை உடையவனாகி விளங்கினான் பரதன். இதனை,

கல்லிடைப் படுத்த புல்லின் வார் சிலைத் தடங்கை
வள்ளல் வைகிய பள்ளி கண்டான் பார்மிசைப்
பதைத்து வீழ்ந்தான் பருவரற் பரவை புக்கான்...

எனவாறு காண்பிக்கின்றார் கம்பர்.


7. இலக்குவனன் புரிந்த செயல் பற்றி குகன் பரதனுக்கு உரைக்கும் தன்மையினை எடுத்துரைக்குக?

தூணைப் போன்ற உயர்ந்த தோள்களைக் கொண்ட பரதன், இராமபிரான் மீது அன்பு கொண்டு அவன் பின்னால் தொடர்ந்து வந்த இலக்குவனன் யாது செய்தான், அவன் இரவுப் பொழுதைக் கழித்தது எவ்விடத்தில் எனக் கேட்க அதற்கு குகன் பின்வருமாறு விடையளித்தான்.

இருளை ஒத்த கரிய திருமேனி படைத்த இராமனும், சீதாப்பிராட்டியும் உறக்கம் கொள்ள, இலக்குவனன் வில்லின் மீது வைத்த கையுடன் வெப்பமுடைய மூச்சு உடையவனாய் தன் இரு கண்களிலும் நீரானது சொரிய, இரவானது முடியும் வரைக்கும் கண்கள் இமை முடாது காவல் செய்து கொண்டிருந்தான் எனப் பரதன் உரைத்தான். இதனை,

கண்கவர் நீர் சொரிய கங்குல் எல்லை
காண்பு அளவும் நின்றான்
இமைப்பிலனர் நயனம் என்றான்.

எனும் பாடலடிகளில் கம்பர் கவியுறுத்துகின்றார்.



இராமன் சீதையுடன் குகனது உதவியுடன் படகில் கங்கையைக் கடத்தல்

மேலதிக வினாக்களும் விடைகளும்

☞ குகப்படலம் 01 – 43 வரையான பகுதியில்,

01. பரதன் சிறப்புக்களை கம்பர் கூட்டும் தன்மையினை எடுத்துரைக்குக?

→பூ வேலைப் பாடுடைய வீரக்கழலை தன் கால்களில் அணிந்துள்ளவன்.

→ அசைகின்ற, அசையாத தன்மைகள் அனைத்தும் வருந்திட கங்கைக் கரை அடைந்தவன்

→ பூமாலை அணிந்த நீண்ட மணி முடியினைச் சூடியவன்

→ இராமன் சென்ற வழியில் அவனைத் தேடிச் சென்றவன்.

→ குகன் இராமனின் இனிய தோழன் என்பதை அறிந்து அவனைக் காண விரைந்து வந்தவன்.

→ வாடிச் சோர்ந்துள்ள திருமேனியை உடையவன்.

→ மரவுரி தரித்து ஒளியற்ற சந்திரனைப் போன்ற துன்பம் வெளிப்படும் முகத்தைக் கொண்டவன்

→ ஆண்களில் சிறந்தவன்.

→ இராமபிரானிடத்தில் குறைவில்லாத அன்பு கொண்டவன்

→ பிரம்மதேவரும் வணங்கப் பெறும் சிறப்புடையவன்

→குகனால் அன்பு பாராட்டப்பட்டு வணங்கப்பட்டவன், அவனது அன்புக்கு பாத்திரமானவன்.

→ வலிமையான தோள்களைக் கொண்டவன்

→ உத்தம குணங்களின் இருப்பிடமானவன்

→ கருணைப் பெருங்கடலை போன்றவன்

→ நேர் வழியில் செல்லும் மனம் படைத்தவன்

→ இராமபிரான் தங்கிய இடம் கண்டு மிகுந்த வேதனைப்பட்டவன்

→ இராமனது துன்பத்திற்கு தான் காரணமாகி விட்டேனே என தன்னை நொந்து கொண்டவன்.

→ இலக்குவன் செய்த செயலை நினைத்து உருகி நின்றவன்.

2. குகனது சிறப்புக்கள் வெளிப்படும் தன்மையினை தெளிவுறுத்துக?

→ இராமபிரானின் உயிர் போன்றவனும், அவனது நண்பனுமாவான்.

→ பரதனின் சேனையைக் கண்டு இராமனுடன் போர் செய்வதற்காவோ வந்துள்ளது என சந்தேகம் கொண்டவன்.

→ பரதனின் சேனையைக் கண்டு பலவாறாக கோபமடைந்தவன்

→ இயமனை ஒத்த வலிமை படைத்தவன்

→ இராம பிரான் மீது அன்பும், பக்தியும் கொண்டவன்.

→ போர் செய்யும் புருவமாகிய வில்லைக் கொண்டவன்

→ வில் வித்தையில் தேர்ச்சியுடையவன்.

→ போர் நெருங்கியது என மகிழ்ச்சி கொண்டு மேலெழுந்த தோள்களைக் கொண்டவன்

→ வெட்டிப் பேசும் மொழிகளை உடையவன்
→ எலிகளை அழிக்கும் பாம்பாவேன் எனக் கூறி நின்றவன்
→ ஆரவாரம் மிக்க தன் சேனை சூழ்ந்து வர தென்கரை வந்தடைந்தவன்

→ பரதனின் சேனையுடன் போர் செய்யக் கருதி தன் சேனையை அழைத்து நின்றவன்
→ தன் சேனை வீரர்களுக்கு முன்பாக பற்பல வீர வார்த்தைகளை உரைத்தவன்
→ வலிமை பெற்றதும். யுத்தத்தால் எழுச்சியுடையதுமான தோள்களை உடையவன்

→ கங்கையாற்றின் இரு பக்கங்களையும் சொந்தமாக கொண்டவன்
→ கங்கையாற்றின் ஆழத்தினை அளவிட்டவன்
→ அளவில்லாத படகுகளுக்கு சொந்தக் காரன்
→ மதம் கொண்ட கொடிய யானையைப் போன்றவன்
→ வாசனை மிக்க குளிர்ந்த மலர்மாலை அணிந்தவன்
→ இருளைப் போன்ற கரிய மேனியழகுடையவன்
→ பரதனின் கோலம் கண்டு திகைப்படைந்தவன்

→ பரதனைக் காண தான் மட்டும் தென் கரை வந்தடைந்தவன்
→ பரதனை அன்பு கொண்டு வணங்கியவன், பின் ஆரத்தழுவியவன்
→ குகனது நற்பண்புகளை கண்டு மனம் நெகிழ்ந்தவன்.
→ அலங்கரிக்கப்பட்ட வீரக்கழலை அணிந்தவன்
→ புலால் மணம் வீசும் வேலினை தன் கையில் பிடித்தவன்

3. இப் பகுதியில், கம்பரின் கவித்துவ சிறப்புக்களை எடுத்துக் காட்டுக?

→ இதிகாச கதையினை அடிப்படையாக கொண்டு, பாடல்கள் அமைத்திருத்தல்.

→ இதிகாச கதாபாத்திரங்களின் உரையாடல் பாங்கில் பாடல்கள் அமைவுற்றிருத்தல்.

→ அணிகள், தொகை நிலைகள் என்பன கையாளப்பட்டிருத்தல்.

→ வர்ணிப்புத் தன்மைகள் அதிக இடங்களில் வெளிப்படுதல்.

→ தமிழ் மொழிச் சொற்களுடன் வட மொழி கலந்த சொற்களையும் இணைத்திருத்தல்

→ கலிவிருத்தம், அறுசீர் விருத்தம் முதலியற்றை பாடல்களில் கையாண்டிருத்தல்

→ இனிமையும், இலகுவான சொல்லாட்சியும், கலைநயம் மிக்கவனவாகவும் பாடல்கள் இடம் பெற்றிருத்தல்.

→ வாசகர் மத்தியில் பக்திச் சுவையினை ஏற்படுத்தியிருத்தல்.

4. இப் பகுதியின் ஊடாக இராமரின் சிறப்புக்களை எடுத்துக்காட்டுக?

→ விஸ்ணுவின் அவதார அம்சமாக விளங்குபவன்

→ குகன் மீது பேரன்பு உடையவன்

→ கருமேகத்தை போன்ற கரிய திருமேனி படைத்தவன்

→ சூரியவம்சத்தில் திரு அவதாரம் செய்தவன்

→ தந்தை சொல் ஏற்று காட்டிற்கு சென்றவன்

→ மை போன்ற கரிய நிற மேனியழகுடையவன்



www.ikeou.lk

குகப்படலம் – கங்கைகாண் படலம்

(பாடல்களை அடிப்படையாக கொண்ட குறு வினா- விடை)

பாடல் பகுதி 44- 72 வரை

1. நன்று என்று புளிஞர் வேந்தன் நண்ணினன் தமரை நாவாய்
சென்று இனித் தருதீர் என்ன வந்தன சிவன் சேர் வெள்ளிக்
குன்று என குனிக்கும் அம்பொன் குவடு என குபேரன் மானம்
ஒன்று என நாணிப் பல்வேறு உருவு கொண்டனைய ஆன

1. இப் பாடல் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக?

- பரதனின் வேண்டுதல் ஏற்று குகன் தன் வேடுவ இனத்தவரிடம் நாவாய்களை கொண்டு வரும்படி கூறியதும் கங்கைக் கரை வந்தடைந்த நாவாய்களின் தோற்றப் பொலிவும் இங்கு காட்டப்படுகின்றது.

2. புளிஞர் வேந்தன் எனப்படுபவன் யார் ?

- குகன்

3. பாடலில் இடம்பெறும் உவமையினை எடுத்துக்காட்டுக?

- படகுகள் பல வடிவங்கள் தாங்கி வருதல்

உவமானம் – பல வகை வடிவம் (வெள்ளிக் குன்று, குபேரன் விமானம், பொன் குவடு)
உவமேயம் – பல வடிவம் தாங்கி வந்த படகுகள்
பொதுத்தன்மை – வடிவம், பருமன்

2. வந்தன வரம்பு இல் நாவாய் வரி சிலைக் குரிசில் மைந்த
சிந்தனை யாவது என்று சிருங்கி பேரியர்கோன் செப்ப
சுந்தர வரிவிலானும் சுமந்திரன் தன்னை நோக்கி
எந்தை இத் தானை தன்னை ஏற்றுதி விரைவின் என்றான்

1. இப் பாடல் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக?

- குகனது ஆணைப்படி நாவாய்கள் எல்லாம் வந்து சேர்ந்ததும் குகன் பரதனை நோக்கி தம் மனக்கருத்து யாது என கேட்க, பரதன் சுமந்திரனை நோக்கி இச் சேனையை விரைந்து படகுகளில் ஏற்றுக எனக் கூறுதல்.

2. வரிசிலைக் குரிசில் யார்? சுந்தர வரிவிலான் யார்?

- வரிசிலைக் குரிசில் – தசரதன்
- சுந்தர வரிவிலான் – பரதன்

3. சிருங்கிபேரியர் கோன் எனப்படுபவன் யார்?

- குகன்

4. ஆனனம் கமலத்து அன்ன மின்அன்ன அமுதச் செவ்வாய்
தேன் நனை குழலார் ஏறும் அம்பிகள் சிந்து முத்தம்
மீன் என விரிந்த கங்கை வின் என பண்ணை முற்றி
வானவர் மகளிர் ஊரும் மானமே நிகர்த்த மாதோ

1. பாடல் பொருளை இக் கால உரைநடையில் எழுதுக?

- **கங்கை நதியானது ஆகாயம் ஆக, கங்கையாறு சிந்துகின்ற முத்துக்கள் விண்மீன்கள் ஆக, தாமரை போன்ற முகமும், அமுதூறும் சிவந்த வாயும், கொண்ட மின்னலையொத்த இடையினையும் தேன் சிந்தும் கூந்தலையுமுடைய அயோத்தியின் மகளிர் ஏறிச் செல்லும் ஓடங்கள் தேவ மகளிர் நீர் விளையாடிப் பின்னர்மேலேறிச் செல்லும் தேவ விமானங்கள் போல காணப்பட்டன.**

2. பாடலில் பயிலப்படும் அணியினை விளக்குக?

- **உவமையணிகள் பல பயிலப்பட்டுள்ளன**

→ அயோத்தி மகளிர் ஏறிச் செல்லும் ஓடங்கள் தேவ மகளிர் ஏறிச் செல்லும் தேவ விமானங்கள் போன்றிருத்தல்

உவமானம் – தேவ மகளிர் செல்லும் தேவ விமானங்கள
உவமேயம் – அயோத்தி மகளிர் செல்லும் ஓடங்கள
பொதுத்தன்மை – அழகு, செல்லுதல்

5. சுற்றத்தார் தேவரொடும் தொழ நின்ற
கோசலையைத் தொழுது நோக்கி,
கொற்றத்தார் குரசில் இவர் ஆர் என்று
குகன் வினவ, கோக்கள் வைகும்
முற்றத்தான் முதல் தேவி மூன்று
உலகும் ஈன்றானை முன் ஈன்றானைப்
பெற்றத்தால் பெறும் செல்வம், யான்
பிறந்தலால், துறந்த பெரியாள், என்றான்

1. இப் பாடல் இடம்பெறும் சந்தர்ப்பத்தினை விளக்குக?

- **உறவினர்களும் தேவர்களும் வணங்கும் படி நின்ற கோசலையை வணங்கிய குகன் இவர் யார் என பரதனிடம் கேட்க பரதன் கோசலையை குகனுக்கு அறிமுகம் செய்தலும்.**

2. கோசலையின் சிறப்புக்கள் எவ்வாறு வெளிப்படுகின்றன?

- **உறவினர்களும் தேவர்களும் வணங்கும் படி நின்றவள்**
- **தசரதனின் மூத்த பட்டத்து ராணி.**
- **திருமாலின் அவதாரமாகிய இராமனை மகனாக பெற்றெடுத்தவள்**

3. மூன்று உலகும் ஈன்றான் யார்? முன் ஈன்றான் யார்?

- **மூன்று உலகும் ஈன்றான் – பிரம்மன்**
- **முன் ஈன்றான் – திருமால்**

கட்டமைப்பு வினா விடை

✍ கம்பராமாயணம் குகப்படலத்தில், தம் சேனையை கங்கையின் தென் கரையில் சேர்க்குமாறு குகனைப் பரதன் வேண்டுவது முதல், பரதனின் சேனை கங்கையை கடந்தது வரையான பகுதியில், (44– 62 வரையான பாடல்)

01. குகனின் கட்டளையேற்று வந்த நாவாய்களின் தோற்றப் பொலிவினை எடுத்துரைக்க?

இராமன் மீது அன் எல்லையில்லா அன்புடையவனாகிய பரதன், குகனிடம் தன் சேனையை கங்கையின் தென்கரைக்கு கொண்டு சேர்க்கும் படி வேண்டியதும் வேடுவர் தலைவனாகிய குகன் உடன் தன் வேடுவ இனத்தவரிடம் நாவாய்களை அதாவது படகுகளை விரைந்து கொண்டு வாருங்கள் எனக் கூறியதும் அக்கணமே நாவாய்கள் எல்லாம் கங்கைக் கரையை வந்தடைந்தன. இத்தகு தன்மையினை கம்பர் பின்வருமாறு காப்பியம் செய்கின்றார்.

வேடுவர்கள் கொண்டு வந்து நிறுத்திய நாவாய்கள் ஒவ்வொன்றும் சிவபெருமானின் வெள்ளி மலையைப் போலவும், முப்புரங்களை எரித்திட சிவன் வில்லாக வளைத்த மகாமேருவாகிய பொன் மலையைப் போலவும், குபேரனது புட்பக விமானத்தைப் போலவும் தனித்தனியே வடிவங்களை தாங்கியதாக காட்சியளித்தனவாம் என்கின்றார் கம்பர். இதனை,

சிவன் சேர் வெள்ளிக் குன்று என
குனிக்கும் அம்பொன் குவடு என
குபேரன் மானம் ஒன்று என நாணிப்
பல்வேறு உருவு கொண்டனைய ஆன (பாடல் 45)

என கம்பர் கவியுறுத்துகின்றார்.

மேலும், அப் படகுகள் எல்லாம் பெண்களின் நடையினை ஒத்ததாகவும், அன்னப்பறவைகள் வெட்கப்படும் படியாக நீரில் நீந்திச் செல்லுவனவாகவும், புவியில் உள்ளவர் பாவ புண்ணியங்களிற்கு ஏற்ப தேவருலகிற்கு ஏற்றி இறக்கும் இருவினைகள் போல அந்த நாவாய்கள் இக்கரையிலிருந்து அக்கரைக்கும், அக்கரையில் உள்ளோரை இக்கரைக்கும் ஏற்றி இறக்கினவாம். மேலும் கங்கா நதியில் இடம் இல்லை என்று சொல்லும் படியாக அப் படகுகள் நெருக்கமாக காணப்பட்டனவாம். இதனை

நங்கையர் நடையின் அன்னம்
நாண் உறு செலவின் நாவாய்
கங்கையும் இடம் இலாமை மிடைந்தன
கலந்த எங்கும்.. (பாடல் 46)

எனும் பாடலடிகள் புலப்படுத்தி நிற்கின்றன.

02. குகப்படலத்தில், பரதனின் சேனை கங்கையை கடந்தமை பற்றிய வர்ணிப்புக்களை எடுத்துரைக்க?

கணக்கிட முடியாத பரதனது சேனையானது குகனது உதவியினால் கங்கை ஆற்றினைக் கடந்த காட்சிகளை கம்பர் அழகுற வர்ணிக்க தன்மையினை கண்ணுறலாம். அவ்வகையில் அத்தகு காட்சிகளை பின்வருமாறு பிரித்து நாம் காணுதல் சிறப்புடையதாகும்.

<u>அ கங்கையை கடந்த யானைப் படை</u>

பரதனின் சேனையில் அங்கம் வகித்த யானைப் படையானது கங்கையில் வியாபித்து அக் கங்கையைக் கடந்த வர்ணிப்பினை <u>49, 50, 51</u> ஆகிய பாடல்களின் வாயிலாக நோக்க முடியும்.

மேகக் கூட்டங்கள் ஒன்றுடன் ஒன்று மோதி மிகுந்த ஓசையோடு ஊழிக் காலத்தில் கடலில் உள்ள நீர் முழுவதையும் வற்றிப் போகும் படி பருகுவதற்கு திரண்டதைப் போலவும், கொடியோடு கூடிய பெரிய கப்பல்கள் பாய் மரங்களோடு கடலில்பரந்து செல்வதைப் போலவும் யானைகள் தம் நீண்ட துதிக்கையை உயர்த்தியவாறு கங்கையில் நீந்திச் சென்றன. இதனை,

இடிபடு முழக்கம் பொங்க இனமழை மகர நீரை
.....
நெடிய கை எடுத்து நீட்டி நீந்தின நெடுங் கை வேழம் (பாடல் 49)

எனும் பாடல் வாயிலாக காண முடிகின்றது.

மேலும், பெருமை மிக்கதும் மிகுந்த மதம் கொண்டதுமாகிய யானைகள் எல்லாம், கங்கையில் உள்ள சங்கு, சுறா மீன், முத்து, மாணிக்கம் என்பவற்றோடு கங்கை நீரும் கரை கடந்து செல்லும் படி நீந்திச் சென்றனவாம். இதனை,

சங்கமும் மகர மீனும் தரளமும் மணியும் தள்ளி
வங்க நீர்க் கடலும் வந்து தன் வழிப் படர... (பாடல் 50)

எனவாறு கம்பர் காப்பியம் செய்கின்றார்.

இவற்றோடு,

கங்கையாற்றில் வியாபித்திருந்த மலை போன்ற உயர்ந்த யானைகளின் உடல்கள் நீரில் மறைந்து அவற்றின் தலை மேடுகள் மட்டும் வெளித்தெரிந்தனவாம். அவ்வாறு வெளித் தெரிந்த யானைகளின் தலை மேடுகள் கங்கையாகிய பெண்ணின் மார்பகங்கள் போல காட்சியளித்தன என்கின்றார் கம்பர். (பாடல் 51)

✓ தேர்ப்படையை கங்கைக் கரை சேர்ப்பித்தல்

பரதனது சேனையில் அங்கம் வகித்திருந்த தேர்படையின் தேர்களை அப்படியே படகுகளில் ஏற்றிச் செல்ல முடியாதமையால் அத் தேர்களை பகுதி பகுதியாக பிரித்து படகுகளில் ஏற்றிச் செல்லப்பட்டனவாம் என்கின்றார் கம்பர். அவ்வகையில் தேர்களின் கொடிஞ்சி, தேர்த்தட்டு, சக்கரம் மற்றும் கொடிகள் என்பவற்றை தனித்தனியாக பிரித்தும் அத் தேர்களில் இணைக்கபட்டிருந்த குதிரைகளையும் தனியாக படகுகளில் ஏற்றி கங்கையின் தென் கரைக்கு கொண்டு செல்லபட்டன.

✓ கங்கையை கடந்த குதிரைப்படை

கங்கையைக் கடந்து சென்ற குதிரைப் படை பற்றிய வர்ணிப்பை நோக்கும் போது, பால் திரண்டதைப் போன்ற உடம்பினையும் அச்சம் தருகின்ற மனத்தையும், காற்று ஒன்று சுழடியதைப் போன்ற காலினையும், விரைந்து செல்லும் நடையினையும், இணைக்கப்பட்ட கடிவாளத்தையும், உடைய எட்டுக் கோடி என கணக்கிடப்பட்ட பாயும் குதிரைகள் எல்லாம் படகுகளில் நீமர்ந்து செல்லவே இலகுவாக கங்கையை கடந்தன. இதனை,

நால் இரண்டு ஆய கோடி நவை இல் நாவாய்கள் மீதா
.....
சேல் திரண்டனைய ஆய கதியொடும் நிமிரச் சென்ற
பால் திரண்டனைய மெய்ய..... (பாடல் 53)

எனும் பாடல் அழகுற எடுத்தியம்புகின்றது.

03. கங்கையில், ஓடத்தில் செல்லும் மகளிர் பற்றிய வர்ணிப்பினை கம்பர் எவ்வாறு எடுத்துரைக்கின்றார்?

குகப்படலம் எனும் இப்பகுதியில், பரதனது சேனையோடு உடன் வந்த அயோத்தியின் மகளிர் கூட்டமும் கங்கையாற்றினைக் கடப்பதற்கு ஓடத்தில் செல்லுகின்ற காட்சியினை கம்பர் அழகுற 54, 55, 56 ஆகிய பாடல்களின் வாயிலாக எடுத்துரைத்துள்ளார்.

அவ்வகையில், வளையல் அணிந்த தளிர் போன்ற கைகளையுடைய பெண்கள் கங்கையின் இடையே புகுந்து நெருக்கமுற படகுகளில் ஒருவர் முன் ஒருவராக ஏறுகின்ற பொழுது, பெருமை மிக்க யானைகளின் வரிசையில் ஒன்றோடு ஒன்று அதன் தந்தங்கள் குத்தி நெருங்குவதைப் போல, அப் பெண்களின் மார்பகங்கள் ஒன்றோடு ஒன்று குத்தி நெருங்கினவாம் என்கின்றார் கம்பர். இதனை,

ஊடு உற நெருங்கி ஓடத்து ஒருவர் முன் ஒருவர் கீட்டி
கூடகத் தளிர்க் கைம் மாதர் குழுமினர் துவன்றித் தோன்ற... (பாடல் 54)

எனும் பாடல் வாயிலாக அறிய முடிகின்றது.

மேலும், கங்கையாற்றில் செல்லும் மரப்படகுகள் வேகமாகச் செல்லும் போது ஒன்றுடன் ஒன்று மோதிக் கொண்டது. அதைக் கண்ணுற்ற மகளிர் மனம் கலங்27அ ச்சமடைந்து இரு பக்கமும் பார்க்கும் போது அவர்களின் கண்களில் இருந்து கண்ணீர் பெருகியது. ஆந் நிலையானது கங்கை ஆற்று நீர் கலங்குவதனால் பயந்து துள்ளும் கயல்மீன் கூட்டங்கள் போல அம் மகளிரின் கண்கள் காட்சியளித்தனவாம். அதாவது கயல் போன்று கண்கள் படைத்தவர்கள் அம் மகளிர் என்பது இதன் கருத்தாகும்.

போலங் குழை மகளிர் நாவாய்ப் போக்கின் ஒன்று ஒன்று
தாக்க மலங்கினர் இரண்டு பாலும் மறுகினர் வெருவி நோக்க
.....
வெருவிப் பாயும் கயற்குலம் நிகர்த்த கண்கள் (பாடல் 55)

04. மரக்கலங்கள் கங்கையின் தென்கரையை சென்று மீண்டும் வடகரையை வந்தடையும் காட்சி எவ்வாறு காட்டப்படுகின்றது?

கங்கையின் வடகரையில் இருந்த சேனைகளையெல்லாம் விருப்புடன் ஏற்றிக் கொண்டு சென்று தென்கரையில் இறக்கி விட்டு ஓடங்கள் எல்லாம் மீண்டும் திரும்பி வரும் காட்சியினை கம்பர் 57, 58, 59, 60 ஆகிய நான்கு பாடல்களில் காப்பியம் செய்துள்ளார்.

அவ்வகையில், அலை கடலில் புகுந்து மிகுதியான நீரினை சுமந்து சென்று அவற்றை மழையாக பொழிந்து கழித்து விட்டு அடுத்த கணமே விரைவுடன் மீண்டும் கடல் நீரை உள்ளெடுப்பதற்கு கடலுக்கு திரும்புகின்ற மேகங்களை போன்று, கங்கையின் வடகரையில் இருந்த சேனையாகிய கடலை சுமந்து கொண்டு அவற்றை தென்கரையில் முற்றாக இறக்கி விட்டு ஒன்றும் இல்லாததாக மீண்டும் வடகரைக்கு வந்து சேர்ந்தன ஓடங்கள்.

இக் கரை இரைத்த சேனை எறிகடல் முகந்து வெ.்.கி
அக்கரை அடைய வீசி வறியன அணுகும் நாவாய்.. (பாடல் 57)

எனும் பாடலடிகள் தெளிவுறுத்துகின்றன.

மேலும், அழகு பொருந்திய பெண்கள் ஏறிச் செல்லுகின்ற அந்த ஓடங்கள் எல்லாம் தேவமகளிர் நீர் விளையாடிப் பின் மேலேறிச் செல்லும் தேவ விமானங்களை போன்றிருந்தனவாம் என்கின்றார் கம்பர். இதனை,

தேன் நனை குழலார் ஏறும் அம்பிகள்...
வானவர் மகளிர் ஊரும் மானமே நிகர்த்த மாதோ.. (பாடல் 58)

எனும் பாடலடிகள் புலப்படுத்துகின்றன.

இவை தவிர, குளிர்ந்த கங்கையாற்றில் நண்டினைப் போல செல்லுகின்ற படகுகள் மகளிரது காலடித் தாமரைகள் படுவதனால் உயிர் பெற்றன போன்று விளங்கின.

இவ்வாறு கங்கையில் ஓடங்கள் பற்றிய வர்ணிப்பினை கம்பர் அழகுற எடுத்துரைக்கின்றார்.

05. முனிவர்கள் வான் வழியாக கங்கையை கடந்த தன்மையை கம்பர் எவ்வாறு காப்பியம் செய்கின்றார்?

கங்கையாற்றில் அனைவரும் கடந்துவிட தவத்தையே மேலான தொழிலாக கொண்ட முனிவர்கள்,கீழான கீழ்ச் சாதியினரால் செய்யப்பட்ட மரக்கலங்களை தீண்டி அவற்றில் ஏற விரும்பாதவர்களாக தம் தவ வலிமையால் ஆகாய மார்க்கமாய் தேவர்களைப் போல பறந்து கங்கையின் அக்கரையை வந்தடைந்தனர். இதனை,

கீழோர் செய் வினை நாவாய் ஏறித் தீண்டலர்
மனத்தின் செல்லும் மொய் விசும்பு ஓடம் ஆக
தேவரின் முனிவர் போனார்..

எனவாறு சுட்டுகின்றார் கம்பர்.

✍ குகப்படலத்தில், பரதன் நாவாயில் ஏறுவது முதல் பரத்துவாச முனிவர் பரதனை எதிர் கொண்டு வரவேற்பது வரையான பகுதியை அடிப்படையாக கொண்டு, (63 – 72 வரையான பாடல்)

01. பரதன் நாவாயில் ஏறிய காட்சியை கம்பர் எவ்வாறு காப்பியம் செய்கின்றார்?

தன்னுடன் வந்த சேனை முழுவதும் கங்கையை கடந்து விடவும், பரதன் தானும் கங்கையை கடந்திடும் படி நாவாயில் ஏறினான். அத்தகு காட்சியை கம்பர் அழகுற காப்பியம் செய்கின்றார். அதாவது, வஞ்சனையான மண்ணாசையை போக்கிய காரணத்தினால் இவ் உலகினை முன்னர் ஆட்சி செய்த மன்னர்கள் அனைவரையும் தனது நற் குணத்தினால் கீழ்ப்படுத்தி அவர்களை அனைவரையும் விட உயர்ந்து நின்றவனாகிய பரதன் நாவாயில் ஏறினான் என கம்பர் குறிப்பிடுகின்றார். இதனை,

கள்ள ஆசையை அழித்து வேறு அவனி பண்டு ஆண்ட
வேந்தரை இழித்து மேல் ஏறினான் தானும் ஏறினான்...

எனும் பாடலடிகள் வாயிலாக கண்ணுறலாம்.

02. பரதன் தன் தாய்மாரை குகனுக்கு அறிமுகம் செய்தல், குகனை தாயருக்கு அறிமுகம் செய்தல் என்பவற்றை தெளிவுறுத்துக?

<u>✍ பரதன் கோசலையை குகனுக்கு அறிமுகம் செய்தல்.</u>

உறவினர்களும், தேவர்களும் வணங்கும் படி நின்ற கோசலையை கண்டு இவர் யார்? என குகன் வினவ பரதன் பின்வருமாறு கோசலையை அறிமுகம் செய்கின்றான். அரசர்கள் தினமும் வந்து தங்குகின்ற முன்றிலை உடைய தசரதச் சக்கரவர்த்தியின் முதல் பட்டத்து இராணியாக விளங்குபவள்,

மேலும் மூன்று உலகையும் படைத்த பிரம்மனை தன் நாபிக்கமலம் மூலம் முன் படைத்த திருமாலின் அவதாரமாகிய இராமனைத் தன் மகனாக பெற்றெடுத்த சிறப்புக்குரியவள், இது மட்டுமன்றி தான் பிறந்த காரணத்தினால் தான் பெற வேண்டிய அரச செல்வமனைத்தையும் துறந்த பெருமைக்குரியவள் எனப் பரதன் குகனுக்கு உரைத்தான். இதனை

" கோக்கள் வைகும் முற்றத்தான் முதல் தேவி
மூன்று உலகும் ஈன்றானை முன் ஈன்றானைப்
பெற்றத்தால் பெறும் செல்வம்,யான்
பிறந்தலால், துறந்த பெரியாள், என்றான்...

எனும் பாடலடிகள் தெளிவுறுத்துகின்றன.

<u>✡ பரதன் சுமித்திரையை குகனுக்கு அறிமுகம் செய்தல்</u>

அறத்தின் உருவம் போல் அருகில் நின்ற சுமித்திரையை பார்த்து குகன் யாரென வினவ அதற்கு பரதன் பின்வருமாறு பதிலளித்தான்.

இவள், சத்திய நெறியில் இருந்து சிறிதும் தவறாதவனாகிய வாய்மை உடையவனாகிய தசரதச் சக்கரவர்த்தியின் இளைய பட்டத்து அரசியாக விளங்குபவள், மேலும், அனைவராலும் வணங்கத் தக்க குல தெய்வமாகிய இராமனை வீடுப் பிரியாதவனாகிய இலக்குவனனைப் பெற்றெடுத்த பெருமைக்குரியவள் என குகனுக்கு அறிமுகம் செய்கின்றான் பரதன். இதனை,

என்ன நெறி திறம்பா தன் மெய்யை நிற்பது ஆக்கி
இறந்தான் தன் இளந்தேவி யாவர்க்கும் தொழு குலமாம்
இராமன் பின்பு பிறந்தானும் உளன் என்ன பிரியாதான்
தனைப் .பயந்த பெரியாள் என்றான்.

எனும் பாடலடிகள் அத் தன்மையை வெளிக்காட்டுகின்றன.

<u>✡ பரதன் கைகேயியை குகனுக்கு அறிமுகம் செய்தல்</u>

பரதனிடம் குகன் கைகேயியை யாரென வினவிடவும், அதற்கு பரதன் கைகேயியை பின்வருமாறு அறிமுகம் செய்கின்றான். இங்கு நிற்கும் இவள் துன்பங்கள் அனைத்தையும் தோற்றுவித்தவள், பழியாகிய குழந்தையை வளர்க்கின்ற தாயாக விளங்கின்றவள். மேலும், அவளது பாழ்பட்ட தீய வயிற்றில் தங்கியிருந்த என் உயிராகிய சுமை குறைந்து தேய்வடைய, இவ் உலகத்தில் துன்பக் குறிப்பில்லாத முகத்தைக் கொண்டவள் இவள் மாத்திரமே. இவளே என்னைப் பெற்றெடுத்த கைகேயி என்பவள் என பரதன் குகனுக்கு கைகேயியை அறிமுகம் செய்தான்.

படர் எலாம் படைத்தாளை பழி வளர்க்கும் செவிலியை
தன் பாழ்த்த பாவிக் குடரிலே நெடும் காலம் கிடந்து ஏற்கும்
உயிர்ப் பாரம் குறைந்து தேய .இடர் இலா முகத்தாளை
அறிந்திலையேல் இந் நின்றாள் என்னை ஈன்றாள்.

எனும் பாடல் இதனை தெளிவுறுத்துகின்றது.

✍ பரதன் குகனை கோசலைக்கு அறிமுகம் செய்தல்.

கோசலையின் பாதங்களில் வீழ்ந்து அழுவானைப் போல நின்ற குகனை யார்? என கோசலை வினவ பரதன் பின்வருமாறு குகனை அறிமுகம் செய்கின்றான்.

இவன் இராமனுக்கு இனிய சகோதரனாக விளங்குபவன், அதுமட்டுமன்றி இலக்குவன், சத்ருக்கனன் மற்றும் எனக்கும் அண்ணனாக விளங்குபவன் மேலும் மலை போன்ற திரண்ட நெடிய தோள்களைக் கொண்ட குகன் எனும் பெயர் படைத்தவன் இவனாவான் எனவாறு அறிமுகம் செய்கின்றான். இதனை,

இன் துணைவன் இராகவனுக்கும் இலக்குவற்கும்
இளையவர்க்கும் எனக்கும், முத்தான்
குன்று அனைய திரு நெடும் தோள் குகன்
என்பான் இந் நின்ற குரசில் என்றான்.

எனும் பாடலடிகள் தெளிவுறுத்துகின்றன.

Q3. குகப்படலத்தில், பரதன் மற்றும் குகனை, கோசலை தேற்றும் விதம் மற்றும் வாழ்த்தும் தன்மை பற்றி எடுத்துரைக்குக?

பரதன் குகனை அறிமுகம் செய்ததும், கோசலை அவர்களை நோக்கி, புத்திரர்களே நீங்கள் இனித் துன்பத்தால் வருந்த வேண்டாம், இராம இலக்குவனர்கள் நாட்டை விட்டு காடு நோக்கி சென்றதும் நன்மை ஆகி விட்டது ஏனெனில் குகன் எனும் நல்ல நண்பனை பெற்றமையால் ஆகும் என அவர்களை தேற்றுவதுடன் அவர்களை வாழ்த்தி பின்வருமாறு உரைத்தாள்.

மலை போன்ற வலிமையான தோள்களை கொண்டவனும், தன் துதிக்கையால் வீரச் செயல் புரியும் ஆண்யானை ஒத்த காளையாகிய இக் குகனோடு சேர்ந்து நீங்கள் ஐந்து பேரும் இந்த நீண்ட நிலவுலகை நெடுங்காலம் ஆட்சி செய்வீர்களாக என வாழ்த்தினாள்.

Q4. குகப்படலத்தில் இடம்பெறும் கதாபாத்திரங்களின் குணப்பண்புகளை எடுத்துரைக்குக?

✍ கோசலையின் சிறப்புக்கள், குணப்பண்புகள்.

குகப்படலத்தில், கோசலையின் சிறப்புக்கள் அழுகுற பாடல்களில் வெளிப்படுகின்ற தன்மையினை நோக்குவோம்.

→ உறவினர்களும், தேவர்களும் வணங்கித் தொழும் வகையில் நின்றவள்.

→ தசரதச் சக்கரவர்த்தியின் முதல் பட்டத்து அரசியாக விளங்குபவள்.

→ மூன்று உலகையும் படைத்த பிரம்மனை முன் படைத்த திருமாலை மகனாக இராமன் பெற்றெடுத்த பெருமைக்குரியவள்

→ குகனால் அன்புருக வணங்கப்பட்ட சிறப்புக்குரியவள்

→ வேடுவ குலத்தில் பிறந்த குகனையும் தன் பிள்ளைகளோடு சேர்ந்து வாழ்த்தியவள்

→ இராமனைப் பிரிந்தமையால் மிகுந்த துன்பமடைந்தவள்

→ கொடி போன்ற மென்மையானவள்

→ தான் பிறந்தமையால் தன் பெற வேண்டிய செல்வங்களை துறந்தவள் என பரதனால் கூறப்பட்ட சிறப்புக்குரியவள்.

ஃ சுமித்திரையின் சிறப்புக்கள் – குணப்பண்புகள்.

→ அறத்தின் உருவம் போல் அதாவது தரும தேவதை என்று சொல்லத்தக்க வகையில் கோசலையின் அருகில் நின்றவள்

→ இவர் யார் என குகனால் வினவப்பட்டவள்.

→ தன் சத்தியநெறியில் நின்று சிறிதும் தவறாது தன் உயிரைத் தியாகம் செய்த தசரதனின் இளைய பட்டத்து அரசியாவாள்.

→ இராமபிரானின் பின் பிறந்தவன் என்று சொல்லத்தக்க வகையில் இராமனின் நிழலாக பின் தொடரும் இலக்குவனனைப் மகனாக பெற்றெடுத்த பெருமைக்குரியவள்.

ஃ பரதனின் சிறப்பு, குணப்பண்புகள்

→ தனக்கு கிடைத்த அரச பதவியை துறந்த நற் செயலால் முன்னர் உலகில் ஆட்சி செய்த மன்னர்களை கீழ்ப்படுத்தி உயர்ந்து நின்றவன்

→ வீரக்கழல் அணிந்த வலிமையான கால்களைக் கொண்டவன்

→ வெற்றி பொருந்திய மாலையை அணிந்தவன்

→ தான் பிறந்தமையால் கோசலை பெற வேண்டிய அரச செல்வங்களை துறந்தவள் என தன் மனதில் வேதனை கொண்டவன்

→ குகனை தன் அண்ணன் எனவும், இராமனுக்கு இனிமையான சகோதரன் எனவும் உரைத்தவன்

→ தன் தாய்மாரான கோசலை மற்றும் சுமித்திரை ஆகியோர் மீது மிகுந்த அன்பும் கைகேயியின் மீது மிகுந்த வெறுப்புணர்ச்சியும் கொண்டவன்

ஃ குகனின் சிறப்பு, குணப்பண்புகள்

குகப்படலத்தில் பிரதான கதாபாத்திரங்களில் ஒன்றாக விளங்குவது குகனது பாத்திரமாகும். அக் குகனது குணப் பண்புகளை இங்கு நோக்குவோம்.

→ கோசலையைப் பற்றி பரதன் கூறியதைக் கேட்டு அவளது பாதங்களில் வீழ்ந்து அழது வணங்கியவன்

→ இராமனுக்கு இனிய சகோதரனாகவும், இலக்குவன், பரதன், மற்றும் சத்ருக்கனுக்கு மூத்த அண்ணனாகவும் விளங்கியவன், அத்தோடு

மலை போன்ற திரண்ட நெடிய தோள்களை உடையவனாகவும் குகன் விளங்கினான்.

→ இராமன் முதலிய தன் பிள்ளைகளுடன் சகோதரனாக இணைத்து கோசலையால் வாழ்த்தப்பட்டவன்

→ தன் துதிக்கையால் வீரச் செயல்களை செய்கின்ற ஆண் யானை போன்றவன் ஆண்மகனாக விளங்குபவன்.

→ கொடுமைகள் செய்த கைகேயியையும் தன் நல்ல கைகளால் வணங்கியவன்

05. குகப் படலத்தில் கைகேயியின் கொடுமை மற்றும் குணப்பண்புகள் எவ்வாறு காட்டப்படுகின்றது?

இப் பகுதியில் கைகேயியின் குணப்பண்புகள் மற்றும் கொடுமை பற்றி இங்கு நோக்குவோம்.இங்கு அதிகமாக அவளது கொடுமைக் குணங்களையே காணமுடியும்.

- **<u>கைகேயியின் கொடுமைகள்</u>**

தன் கணவனை சுடுகாட்டிற்கு அனுப்பியவள், அதாவது தன் வரத்தின் காரணமாக இராமன் காடு செல்ல அவன் பிரிவைத் தாங்காது தசரதன் இறந்தான். மேலும், தன் மகனாகிய துன்பக் கடலில் செல்ல வழிவகுத்தவள் எனவும், கருணைக் கடலாகிய இராமன் கடுமையான காட்டிற்கு செல்ல வழிசெய்தவள் எனவும், தன் மனத்தால் நினைத்து செய்யும் துன்பங்களால் உலகம் முழுவதையும் அளவிடவள், அதாவது திருமால் அன்று மூவடியால் உலகை அளந்தான் ஆனால் கைகேயி தன் செயலால் மூவுலகையும் துன்பத்தில் மூழ்கச்செய்தவள். இது மட்டுமன்றி, துன்பங்கள் அனைத்தையும் தோற்றுவித்தவள், துன்பக் குறிப்பினை சிறிதும் தன் முகத்தில் காட்டாதவள் என்பனவும் கைகேயியின் கொடுமைக் குணத்திற்கு எடுத்துக்காட்டாகும்.

- **<u>கைகேயியின் குணப்பண்புகள்</u>**

→ தசரதனின் இரண்டாவது பட்டத்து அரசியானவள்

→ பரதனை மகனாகப் பெற்றெடுத்தவள்

→ துன்பம் அனைத்தையும் தோற்றுவித்தவள்

→ பழியை குழந்தையாக வளர்க்கும் செவிலித் தாயானவள்

→ துன்பக் குறிப்பை சிறிதும் வெளிக்காட்டாத முகத்தை கொண்டவள்

→ பாழ்பட்ட வயிற்றினை கொண்டவள் என பரதனால் கூறப்பட்டவள்

இவ்வாறு கைகேயியின் கொடுந் தன்மை பற்றியும் அவளது குணப் பண்புகளையும் கம்பர் அழகுற காட்டி நிற்கின்றார்.

●●●●●

கம்பராமாயணம் கவித்துவம் மிக்க பாடல்கள்

குகனது அறிமுகம் – கம்பரின் பாடல்

ஆய காலையின் ஆயிரம் அம்பிக்கு
நாயகன் போர்க் குகன் எனும் நாமத்தான்
தூய கங்கைத் துறை விடும் தொன்மையான்
காயும் வில்லினன் கல் திரள் தோளினான்

பொருள் – ஆயிரம் படகுகளுக்கு சொந்தக்காரன், போர்க்குணம் மிகுந்தவன், குகன் எனும் பெயர் கொண்டவன், தூய்மையான கங்கையாற்றில் படகுகளைச் செலுத்துகின்றவன், பகைவரை அழிக்கின்ற வில் வீரன், மலை போன்ற நெடிய தோள்களை கொண்டவன்.

இராமனும் குகனும் கொண்ட அன்பு

அன்னவன் உரை கேளா அமலனும் உரை நேர்வான்
என் உயிர் அனையாய் நீ, இளவல் உன் இளையான், இந்
நன்னுதலவள் நின் கேள், நளிர் கடல் நிலம் எல்லாம்
உன்னுடையதே நான் உன் தொழில் உரிமையின் உள்ளேன்

பொருள் – குகன் உரைத்திட அதற்கு இராமன் பதிலுரைக்கின்றான், வேடுவர் தலைவனே நீ என் உயிர் போன்றவன், என் தம்பியான இலக்குவனன் உனக்கும் தம்பியாவான், அழகிய நெற்றியை உடைய இச் சீதை உனக்குத் தோழியாவாள், கடலால் நிறைந்த இந்த நிலம் முழுவதும் உன்னுடையதாகும். நானும் உனது ஆணைக்குக் கட்டுப்பட்டவன் ஆவேன் என்றான் இராமன்.



பரதன் இராமன் திருவடிகளில் வீழ்ந்து வணங்குதல்